# மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் டாக்சி, ஆட்டோ வசதி

## கடந்த மாதம் 45 ஆயிரம் பேர் பயன்படுத்தினர்

சென்னை, ஜூலை.11–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த ஆண்டு ஆகஸ்டு 11–ந் தேதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்காக பல போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில் 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ இணைப்பு சேவைகள் ரூ.5 கட்டணத்தில் குறிப்பிட்ட பாதைகளில் இயக்கப்படுகின்றன. அதேபோல் ஷேர் டாக்சி சேவைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ரூ.10 கட்டணத்துடன் 2 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கப்படுகின்றன.

அந்தவகையில் கடந்த ஜூன் மாதம் ஷேர் டாக்சி சேவையை 6 ஆயிரத்து 487 பேரும், ஷேர் ஆட்டோவை 39 ஆயிரத்து 337 பேர் உள்பட 45 ஆயிரத்து 824 பேர் இந்த வசதிகளை பயன்படுத்தி உள்ளனர். ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகளை தொடங்கப்பட்ட நாளில் இருந்து கடந்த மாதம் 30–ந்தேதி வரை 3 லட்சத்து 95 ஆயிரத்து 113 பயணிகள் பயன்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.